பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 10 2023 **SATURDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இஸ்ரேலில் பாலஸ்தீனிய தீவிரவாத குழுக்கள் தாக்குதல் நடத்தியுள்ளதையடுத்து அங்குள்ள இந்தியர்கள் பாதுகாப்பு நடைமுறைகளை முழுமையாக கடைபிடிக்குமாறு வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

2. கரும்பிலிருந்து பெறப்படும் மொலாசஸுக்கான சரக்கு மற்றும் சேவை வரி 28 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. மருத்துவ தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்கள் உற்பத்தியின் மையமாக இந்தியா உருவாகி வருகிறது என்று இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆழ்கடல் மீன்பிடி திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக மீன்வளத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய வீரர்கள் இதுவரை 107 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<<>>>>>>

இஸ்ரேலில் பாலஸ்தீனிய ஹமாஸ் தீவிரவாத குழுக்கள் இன்று தாக்குதல் நடத்தியதையடுத்து, அந்நாட்டின் பாதுகாப்புப்படையினர் போர் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தெற்கு இஸ்ரேல் பகுதியில் உள்ள காசாவில் தீவிரவாத குழுக்கள் ராக்கெட் தாக்குதலை நடத்தியுள்ளன.

காசா எல்லைப்பகுதியில் பல்வேறு பகுதிகளில் ஊடுருவல்கள் நிகழ்ந்துள்ளதாக பாதுகாப்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, **Tel Aviv** நகரில் உயர்மட்ட அதிகாரிகளுடன் அவசர கூட்டம் நடத்திய அந்நாட்டின் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு, பாதுகாப்பு குறித்து முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும், பதில் தாக்குதலை தீவிரமாக மேற்கொண்டு நிலைமையை கட்டுக்குள் கொண்டுவருவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, இஸ்ரேலில் உள்ள இந்தியர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும், பாதுகாப்பு நடைமுறைகளை முழுமையாக பின்பற்றுமாறும் இந்திய வெளியுறவுத்துறை கூறியுள்ளது.

அங்குள்ள இந்திய தூதரகம் நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும், அவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூதரகத்தை தொடர்புகொள்ள 9 7 2 3 5 2 2 6 7 4 8 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**cons1.telaviv@mea.gov.in** என்ற இணையதளத்திலும் தகவல்களை தெரிவிக்கலாம் என்றும் இந்திய தூதரகம் கூறியுள்ளது.

இஸ்ரேலில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல் தமக்கு அதிர்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலில் பலியான அப்பாவி மக்களின் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாகவும், அவர்களுக்காக பிரார்த்தனை செய்வதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

இக்கட்டான சூழ்நிலையை சந்தித்துவரும் இஸ்ரேல் நாட்டிற்கு இந்தியா உறுதியுடன் துணை நிற்கும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள செய்தியில் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

70 சதவீதம் சிறு தானியங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மாவுப் பொருட்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்கப்படுவதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்,

புதுதில்லியில் இன்று நடைபெற்ற சரக்கு மற்றும் சேவை வரிக் குழுமத்தில் 52-வது கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர், 70 சதவீத சிறு தானியங்களை பயன்படுத்தி தயாரிக்கப்படும் மாவு பொருட்கள் பாக்கெட்களில் அடைக்கப்பட்டு லேபிள் ஒட்டப்பட்டிருந்தால் அவற்றுக்கு ஐந்து சதவீத ஜி எஸ் டி வரி விதிக்கப்படும் என்று தெளிவுபடுத்தினார்.

கரும்பிலிருந்து பெறப்படும் மொலாசஸுக்கான ஜிஎஸ்டி வரி 28 சதவீதத்திலிருந்து ஐந்து சதவீதமாக குறைக்கப்படுவதாகவும், இதனால் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக அளவில் பயன்பெறுவார்கள் என்றும் அவர் கூறினார்.

ஜி எஸ் டி மேல்முறையீட்டு தீர்ப்பாய சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மதுபானம் தயாரிப்புக்கான சமநிலைப்படுத்தப்பட்டு ஆல்ஹகாலுக்கு கூடுதல் வரி விதிக்க மாநிலங்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மருத்துவ தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்கள் உற்பத்தித்துறையில் உலகின் மையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற எட்டாவது சர்வதேச மருத்துவ தொழில்நுட்ப கருத்தரங்கில் உரையாற்றிய அவர், மருத்துவ தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களுக்கான சந்தை இந்தியாவில் தற்போது 11 பில்லியன் டாலராக உள்ளது என்றும், 2050-ஆம் ஆண்டுக்குள் இது 50 பில்லியன் டாலராக உயரும் என்றும் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திரமோடி கடந்த ஆகஸ்ட் மாதம் தமது சுதந்திரதின செய்தியில் விடுத்த அறிவிப்புகள் குறித்து இன்று முக்கிய ஆலோசனை மேற்கொண்டார்.

ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு குறைந்த வட்டியில் வீட்டுவசதி கடன் வழங்குவதை நடைமுறைக்கு கொண்டு வருவது குறித்தும், வீடுகளுக்கு சூரியசக்தி மின்சாரம் வழங்குவதற்கான திட்டம் குறித்தும் பிரதமர் ஆலோசனை நடத்தினார்.

<<<<<<<>>>>>>

விவசாயிகளுக்கு வழங்கப்படுவதைப்போல் மீனவர்களுக்கும் கடன் அட்டை வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினத்தில் சாகர் பரிக்கிரமா கடலோர ஆய்வுப் பணியை மீன்வளத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகனுடன் இணைந்து அவர் மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடையே பேசிய திரு பர்ஷோத்தம் ரூபாலா, பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு மீன்வளத்துறைக்கு 36 ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டிருப்பதாகக் கூறினார்.

மீன்வளத்துறையின் பணிகள் விரிவாக்கம் செய்யப்பட்டு 13 செயல்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடல்பாசி வளர்ப்பு, வண்ண மீன்கள் வளர்ப்பு உள்ளிட்ட உபரி தொழில்களும் மீன்வளத்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் தெரிவித்த அவர், நவீன தொழில்நுட்ப உத்திகளை மீன்பிடி தொழிலில் பயன்படுத்தவும், மீனவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து தரவும் அரசு ஆர்வம் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், தமிழகத்தில் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர். நாகை மாவட்டங்களில் ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆழ்கடல் மீன்பிடி திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

மீனவர்களுக்கென தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டு, அவர்களுக்கான நலத்திட்டங்கள் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு எல் முருகன் தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப் போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ள இந்திய அணியினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இப்போட்டியில் இந்தியா வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை 100-ஐ கடந்துள்ளதைக் கண்டு நாடே மகிழ்ச்சியில் திளைப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

ஒவ்வொருவரின் சாதனையும் நாட்டு மக்களுக்கு பெருமிதத்தை அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் போட்டியில் பங்கேற்ற அனைவருடனும் வரும் 10-ஆம் தேதி தாம் கலந்துரையாடவுள்ள நிகழ்ச்சியை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில், வீரர்கள் தங்களின் முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் திறமையை வெளிப்படுத்தி இந்த மைல் கல்லை எட்டி சாதனை புரிந்துள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பாராட்டு தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 28 தங்கம், 38 வெள்ளி, 41 வெண்கலம் என மொத்தம் 107 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் தொடர்ந்து நான்காவது இடத்தில் நீடிக்கிறது.

சீனாவின் **Hangzhou**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா இன்று மட்டும் 6 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

வில்வித்தை போட்டியின் ஆடவர் பிரிவில் **Abhishek Verma**-வும், மகளிர் பிரிவில் **Jyothi Vennam**-மும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் கபடி போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா - சீன தைபே-யை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

ஆடவர் கபடி போட்டியிலும் இந்தியா-வுக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் கொரியாவை வீழ்த்தி இந்திய அணி தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தது.

வில்வித்தைப் போட்டியின் ஆடவர் பிரிவில், **Ojas Deotale** வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் பிரிவில் **Aditi** வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

மல்யுத்தப் போட்டியின் ஆடவர் 86 கிலோ எடைப்பிரிவில் **Deepak Punia** வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்று தங்கப் பதக்கத்தை கைப்பற்றியது.

**<<<<<<<END>>>>>>>**